FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319456

1. District : திருப்பூர். PS: பெருமாநல்லூர் Year: 2026 FIR No.: 12/26/AC/TPJL Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள் 29/03/2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act, 2018. Sections பிரிவுகள்: U/s 7 of PC (Amendment) Act, 2018
(ii) Act சட்டம்: The Bharatiya Nyaya Sanhita 2023 Sections பிரிவுகள்: U/s 49 of the BNS, 2023
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 27.03.2026 Date to : 27.03.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 15.00 hrs Time to : 23.55 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 29.03.2026 Time : 10.00 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலம் புகார் அளிக்கப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 20 கி.மீ. வடக்கு திசை.

Beat Number : (b) Address : சார்பதிவாளர் அலுவலகம், அறை எண்.16, மேலகரல் ரோடு பல்லடம், திருப்பூர் மாவட்டம்.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. கு. வாலசுப்பிரமணியன் (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : அரசுத்துறை அலுவலர் (g) Address : தொலைபேசி எண், மேலாளர், திருப்பூர் மாநகர் மாவட்ட அரசுப்பணி அலுவலர் தொழில் முகவரி தேனி மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு. S. வைரக்கண்ணன், (S1/11) S/o. A.C. சதாசிவம், சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், பல்லடம், திருப்பூர் மாவட்டம், அறை எண். 27, அலுவலக வேலை நேரத்தில் மட்டும் 6 மொபைல் போன் எண்களை இணைக்கவும்)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-தகவல்-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

29/8/26

29/08/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

29/08/2026 at 12.30 hrs.

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2026/AC/TPR, u/s.7 of the Prevention of Corruption (Amedment) Act, 2018 r/w 49, Bharatiya Nyaya Sanhita, 2023 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண் –7 இன் தொடர்ச்சி.,

எதிரிகளின் பட்டியல்

1. திரு.S.வெங்கடேஷ்வரன் (56/2026), த/பெ.A.C.சதாசிவம், சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், பல்லடம், திருப்பூர். இருப்பிட முகவரி: கதவு எண்.27, ஆஷாத் வீதி, புஞ்சை புளியம்பட்டி, ஈரோடு.

2. திரு.F.சாமில் ஹமீது (31/2026), த/பெ.பைஸ் அகமது, கதவு எண்.10/2, ரஹீம் சாஹிப் தெரு, மங்கலம் ரோடு, பல்லடம், திருப்பூர்.

3. திரு.P.மணிவண்ணன் (44/2026), த/பெ.பெரியசாமி, கதவு எண்.15, திருவள்ளுவர் தெரு, N.G.R.சாலை, பல்லடம், திருப்பூர்.

4. திரு.P.பொன்ராஜ் (43/2026), காளியப்ப தேவர், கதவு எண்.7(1), வண்ணார் வீதி, பெரியகலயமுத்தூர், நெய்காரப்பட்டி, பழனி தாலுகா, திண்டுக்கல், திருப்பூர். தற்போது கதவு எண்.220/1, K.P.C.நகர், வெள்ளக்கோவில், காங்கேயம், திருப்பூர்.

5. திரு.S.ரமேஷ்குமார் (58/2026), த/பெ.சாமியப்பன், கதவு எண்.3, T.S.K.மரகதம் லேஅவுட், தாராபுரம் ரோடு, திருப்பூர்.

6. திரு.R.ஜெயபிரகாஷ் (57/2026), த/பெ.ராமசாமி, சின்னியகவுண்டன்பாளையம், பணிக்கம்பட்டி, பல்லடம், திருப்பூர்.

7. திரு.D.நடராஜ் (44/2026), த/பெ.தண்டபாணி, கதவு எண்.2/907, வடக்கு 6 வது தெரு, மகாலட்சுமி நகர், பல்லடம் தாலுகா, திருப்பூர்.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2026/AC/TPR, u/s.7 of the Prevention of Corruption (Amedment) Act, 2018 r/w 49, Bharatiya Nyaya Sanhita, 2023 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண் –12 இன் விபரம்.,

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

இன்று 29.08.2026 ஆம் தேதி 10.00 மணிக்கு கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், திரு. பூ. விஜயகுமார், என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.பூ.விஜயகுமார், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். ந.க.எண்.152/2026/ஐ2, நாள்: 28.08.2026. அய்யா, பொருள்: ஆய்வுக்குழு – திடீர் சோதனை – 27.08.2026 ஆம் தேதி மாலை 15.00 மணி முதல் 23.55 வரை பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டது – குற்றவியல் தொடர்புள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுதல் – தொடர்பாக. திருப்பூர் மாவட்டம், பல்லடம், மங்கலம் ரோடு, கதவு எண். 16 (பயணியர் மாளிகைக்கு எதிராக) என்ற முகவரியில் செயல்பட்டுவரும் பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சார்பதிவாளர் திரு.ச.வெங்கடேஷ்வரன் மற்றும் சார்பதிவாளர் அலுவலக பணியாளர்கள் பத்திரப்பதிவு, திருமணப்பதிவு, வில்லங்க சான்று நகல் வழங்குதல், பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச்சான்றிதழ் வழங்குதல் மற்றும் அந்த அலுவலகத்தில் செய்ய வேண்டிய இதர பணிகளுக்காக தங்களது அலுவலகம் வரும் பொது மக்களிடம் தங்களது பதவிகளை தவறாகப் பயன்படுத்தி நேரடியாகவும், பத்திர எழுத்தர்கள், ரியல் எஸ்டேட் புரோக்கர்கள் மற்றும் அவர்களுடைய உதவியாளர்கள் மூலம் கையூட்டு கேட்டு பெறுவதாக கிடைத்த நம்பத்தகுந்த ரகசிய தகவலின் பேரில் 27.08.2026 ஆம் தேதி மாலை 15.00 மணி முதல் 23.55 மணி வரை திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் குழுவினருடன் இணைந்து பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது அந்த அலுவலகத்தில் பணியில் இருந்த பல்லடம் சார்பதிவாளர் திரு.ச.வெங்கடேஷ்வரன் மற்றும் அலுவலக பணியாளர்களிடம் சோதனைக்குழுவினர் விசாரணை மேற்கொண்டு சோதனை செய்தனர். விசாரணையில்

திரு.ச.வெங்கடேஷ்வரன் கடந்த 17.06.2026 ஆம் தேதி முதல் பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில், சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 12.03.1993 ஆம் தேதி பதிவுத்துறையில் இளநிலை உதவியாளராக நாமக்கல் மாவட்டத்தில் பணியில் சேர்ந்ததாகவும், 21.09.2017 ஆம் தேதி சார்பதிவாளராக பதவி உயர்வு பெற்று திருப்பூர் மாவட்டம் குன்னத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்ததாகவும், அதன் பிறகு பல அலுவலகங்களில் பணிபுரிந்து விட்டு 17.06.2026 ஆம் தேதி முதல் பல்லடம் சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் சார்பதிவாளர் அலுவலக அறையில் இருந்த தனிநபர்கள்/ புரோக்கர்கள்/ ஆவண எழுத்தர்கள் (1) திரு.F.சாமில் அகமது என்பவரிடமிருந்து கணக்கில் வராத பணம் ரூ.2,000/–ம், (2) திரு.P.மணிவண்ணன் என்பவரிடமிருந்து கணக்கில் வராத பணம் ரூ.26,300/–, (3) திரு.P.பொன்ராஜ் என்பவரிடமிருந்து இரண்டு கற்றைகளாக கணக்கில் வராத பணம் ரூ.33,300/–, (4) திரு.S.ரமேஷ்குமார் என்பவரிடமிருந்து இரண்டு கற்றைகளாக கணக்கில் வராத பணம் ரூ.79,000/–, (5) திரு.R.ஜெயபிரகாஷ் என்பவரிடமிருந்து கணக்கில் வராத பணம் ரூ.40,000 /–, (6) திரு.D.நடராஜ் என்பவரிடமிருந்து கணக்கில் வராத பணம் ரூ.11,700/–, ஆக மொத்தம் ரூ.1,92,300/– சார்பதிவாளருக்கு கொடுக்கும் லஞ்ச பணமாக இருக்க கூடும் என்று மேற்படி 6 தனிநபர்கள்/புரோக்கர்கள்/ஆவண எழுத்தர்களிடமிருந்து விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திடீர் சோதனையின் போது சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து கீழ்கண்ட ஆவணங்கள் அசல் / சான்று செய்யப்பட்டுள்ள நகல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அவை. 1). பல்லடம் சார்பதிவாளர் அலுவலகம், வருகைப்பதிவேடு 02.01.2026 முதல் 31.012.2026 வரை தொகுதி எண்:125– பக்கம் 1 முதல் 6 வரை. 2). பல்லடம் சார்பதிவாளர் அலுவலக தனிநபர் கையிருப்பு பதிவேடு நாள் 02.01.2026 முதல் 31.12.2026 வரை, தொகுதி எண். 115– பக்கம் 1 முதல் 8 வரை. 3). கணியியில் பிரிண்ட் செய்யப்பட்ட 27.08.2026–ம் தேதிக்கான A கணக்கு ஆவண எண்கள். 9762/26 முதல் 9844/26 முடிய 83 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட விபரம் – பக்கம் 1 முதல் 12 வரை. 4). கணினியில் பிரிண்ட் செய்யப்பட்ட 27.08.2026–ம் தேதிக்கான B கணக்குபட்டியல் (ரூ.1,000/- இணையவழி செலுத்தப்பட்டுள்ளது) – பக்கம் –2. 5). கணினியில் பிரிண்ட் செய்யபட்ட 27.08.2026–ம் தேதிக்கான C கணக்குபட்டியல் (பதிவுகள் இல்லை) – பக்கம் –1. 6) கணினியில் பிரிண்ட் செய்யப்பட்ட 27.08.2026–ம் தேதிக்கான D கணக்குபட்டியல் (ரூ.24,516/- இணையவழி செலுத்தப்பட்டுள்ளது) – பக்கம்

1 முதல் 4 வரை. 7). கணினியில் பிரிண்ட் செய்யப்பட்ட 27.08.2026–ம் தேதிக்கான CD account கணக்கு பட்டியல் (ரூ.11,800/- இணையவழி செலுத்தப்பட்டுள்ளது) – பக்கம் 1 முதல் 6 வரை. 8) கணினியில் பிரிண்ட் செய்யப்பட்ட 27.08.2026–ம் தேதிக்கான H கணக்குபட்டியல் விபரம் (A கணக்கில் ரூ.14,95,708/-ம், CD குறுந்தகடு ரூ.11,800/-, உட்பிரிவு ரூ.59,000/- இ.மு.ச.பிரிவு 41 மற்றும் 42 ரூ.38,72,308/-, B Account ரூ.1000/- மற்றும் Societies Registration Act இல்லை, இந்து திருமண பதிவு கட்டணம் ரூ.265/- தமிழ்நாடு திருமண பதிவு கட்டணம் ரூ. 120/- மொத்தம் ரூ.54,64,617/-) - பக்கம் –2. 9). கணினியில் பிரிண்ட் செய்யப்பட்ட 27.08.2026–ம் தேதிக்கான Birth and Death பட்டியல் (பதிவுகள் இல்லை)– பக்கம் –1. 10). கணினியில் பிரிண்ட் செய்யப்பட்ட 27.08.2026–ம் தேதிக்கான DW கணக்குபட்டியல் 115X10 பதிவுகள் உள்ள பக்கம் –1. மேற்படி திடீர் சோதனையின் போது பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்த மேற்படி தனிநபர்கள்/ புரோக்கர்கள்/ஆவண எழுத்தர்கள் (1) திரு.F.சாமில் அகமது, (2) திரு.P.மணிவண்ணன், (3) திரு.P.பொன்ராஜ், (4) திரு.S.ரமேஷ்குமார், (5) திரு.R.ஜெயபிரகாஷ், (6) திரு.D.நடராஜ் மற்றும் (7) பல்லடம் சார்பதிவாளர் திரு.ச.வெங்கடேஷ்வரன் ஆகியோர்களது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இதர விவரங்கள் குறித்து திடீர் சோதனையின்போது தயார் செய்யப்பட்ட எனது நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கை சமயத்தில் பெறப்பட்டுள்ள வாக்குமூலங்களில் விரிவாக கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட நடவடிக்கை குறிப்பு, பெறப்பட்ட வாக்குமூலங்கள், ஆவணங்கள் மற்றும் இந்த திடீர் தணிக்கையின் போது மேற்படி 6 நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.1,92,300/– (ரூபாய் ஒரு லட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து முந்நூறு) உடன் தங்களிடம் ஆஜர் செய்கிறேன். இந்த நிகழ்வு குறித்து உண்மை நிலை அறிய தக்க புலன் விசாரணை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd XXXXX 29.8.26 (பூ. விஜயகுமார்).

Sir, Received the complaint along with proceedings, and statements today on 29.08.2026 at 10.00 hrs and registered a case in Tiruppur Vigilance Anti-Corruption Cr.No.12/2026/AC/TPR u/s 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 r/w 49, Bharatiya Nyaya Sanhita, 2023 today at 11.15 hrs and I took up investigation. Sd XXXXX 29.08.2026 N.K.Ravichandran, Deputy Superintendent of Police, V&AC, Tiruppur.

Original FIR along with original computer typed complaint, proceedings and statements recorded by Tr.P.Vijayakumar, District Inspection Cell Inspector, Coimbatore, Erode, Tiruppur and Nilgiris Districts is submitted to the Hon'ble Principal District and Session Judge, Principal District and Session Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

23.03.2012

(N.K.RAVICHANDRAN)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.